# செய்யுள் திரட்டு

## தமிழ் இளநிலைப் பகுதி-1


தமிழாய்வுத் துறை

மாட்சிமைதங்கிய மன்னர் கல்லூரி

(தன்னாட்சி B+)

புதுக்கோட்டை- 622 001.

## முதற்பருவம்

### அலகு - 1

1. பாரதியார் -1. தமிழ்த்தாய்
   -2. வந்தேமாதரம்
2. பாரதிதாசன் -1. அழகு
   -2. தோழனே உன்னிடம் சொல்வேன்
3. கவிஞர் முடியரசன் -1. தலைமை வகிப்போம்
4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் -1.மனிதனாக வாழ்ந்திட வேணும்

### அலகு - 2

5. கண்ணதாசன்- 1. நீ மணி; நான் ஒலி!
6. நா. காமராசன்- 1. காகிதப் பூக்கள்
7. மீரா - 1. எதிரொலி
   2. கடமையைச் செய்
8. கந்தர்வன்- 1. புதியகல்வி
9. அப்துல் ரகுமான்- 1. கனவு
10. வைரமுத்து- 1. எப்போது உருப்படும் இந்த தேசம்

இருபதாம் நூற்றாண்டினை 'மறுமலர்ச்சிக் காலம்' எனலாம். இந்திய விடுதலைப் போராட்டமும் மேலை நாடுகளின் இலக்கியக் கோட்பாட்டுத் தாக்கமும் புதிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டன. பழைய மரபுகளிலிருந்து புதிய கண்ணோட்டங்கள் விரிய ஆரம்பித்தன.

சிற்றரசர்களைப் புகழ்ந்து துதிபாடி உலா, மடல் எனப் பாடும் நிலையில் மாற்றம் விளைந்தது. விடுதலை வேட்கையும், ஆங்கிலேயரின் ஆதிக்கப் போக்கும் சமூக ஆர்வலர்களைத் தட்டி எழுப்பியது. பாரதியார் உள்ளிட்ட கவிஞர்கள் சமூகம் குறித்துப் பாடத் தொடங்கினர். இத்தகைய ஒன்றுபட்ட உணர்வோட்டங்கள் **பாரதிபரம்பரை** என்ற புதியதொரு பாதையை உருவாக்கியது.

## புதுக்கவிதையின் தோற்றம்

இருபதாம் நூற்றாண்டை உரைநடையின் பொற்காலம் எனலாம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மருத்துவம், நாடகம், சோதிடம் முதலிய அனைத்துத் துறைகளிலும் செய்யுளே தன் ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தது. செய்யுள்நடை செல்வாக்குப் பெற்றிருந்த அந்தக் காலத்தில் உரைகளிலும்கூட எதுகை மோனை முதலிய அமைப்புகள் காணப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வரவால் நாடெங்கும் அச்சுகூட்ங்கள் தோன்றலாயின. ஒரு சிலருக்கு மட்டும் என்றிருந்த கல்வி எல்லோர்க்கும் என்ற நிலை ஏற்பட்டது. எனவே எல்லோர்க்கும் விளக்கமான செய்யுள்நடை விடைபெற்று உரைநடை இடம் பெற்றது. இந்நிலையில் தம் சமயத்தைப் பரப்ப வந்த ஐரோப்பியப் பாதிரிமார்கள் உரைநடையில் தம் சமயப் பிரசாரங்களை எழுதத் தொடங்கினர். பின்னர் அதனை வசன நடையில் மாற்றும் பணியில் ஈடுபட்டனர். இறுதியில் சமயப் பிரசாரத்திற்காக எழுந்த உரைநடை எல்லாவித இலக்கியங் களையும் ஆட்சி செய்யத் தொடங்கியது. சிறுகதை, புதினம் முதலான இலக்கியத் துறைகள் வசனத்தின் ஆளுமையைப் பெற்றன. இவற்றின் தொடர்ச்சியாகக் கவிதைத் துறையிலும் வசனம் தன் ஆதிக்கத்தைப் படர வைத்தது. பழங்காலத்தில் செய்யுள் செல்வாக்குப் பெற்றிருந்தபோது, எவ்வாறு உரைநடையில் அது தன் செல்வாக்கைக் காட்டியதோ அது போன்று உரைநடை செல்வாக்குப் பெற்றபோது அது தன் செல்வாக்கைக் கவிதையில் காட்டத் தொடங்கியது. இதன் வெளிப்பாடே வசன கவிதை.

தமிழ்க் கவிதையின் நீண்ட வரலாற்றுச் சாரமாகத் திகழ்வது அதன் மானுடக் கண்ணோட்டம்தான். சங்கக் கவிஞர்கள் முதல் வள்ளுவன், இளங்கோ, சாத்தனார், கம்பன், பாரதி, பாரதிதாசன் வரை தமிழ்க் கவிதைக்கு ஒரு மானுடக் கண்ணோட்டம் உண்டு. இந்தக் கண்ணோட்டம் தான், வருங்காலத்தைப் பற்றி ஆக்க ரீதியான படைப்புக் கற்பனைதான் தமிழ்க் கவிதையில் தொடர்ந்து வரும் உயிர்ப்புள்ள சாராம்சமாகும். இந்த மனிதநேயக் கருத்துகள் இடம்பெறும் கவிதைகளின் தொடர்ச்சியாகத்தான் புதுக் கவிதை தோன்றி வளர்ந்து வருகிறது.

## தமிழில் புதுக்கவிதை வளர்ச்சி

புதுக்கவிதை ஒரு தோற்றமல்ல; இது பரிணாம வளர்ச்சி என்று கூறும் பிரெஞ்சுத் திறனாய்வாளர் கஸ்டாவ்கான், மரபு யாப்புக் கவிதையிலிருந்து புதிய கட்டற்ற கவிதையின் தோற்றத் திற்கான காரணங்களைக் கூறும் போது, 'சந்தம் கண்ணுக்கு மிகையாகத் தோன்றுகிறது. அது மாற்றி அமைக்கப்பட வேண்டும். அது துண்டிக்கத் தக்கதல்ல, அதற்கென்று விடுதலை கொடுத்து விடுவோம்' என்று நயம்படக் கூறும் கான், 'வரிகளின் தொடக்கங்களில் தொடர்ந்து உண்டாக்கப்படும் மணி

கி.பி. 1910இல் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் புதுக்கவிதை முயற்சி தொடங்கியது. 1910-18 என்ற இடை வெளியில் தமிழ் நாட்டில் பாரதியின் வசன கவிதை முயற்சி வளர்ந்தது. 1930க்குப் பின்னர்ப் பாரதியின் வழியில் ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா., வல்லிக்கண்ணன், புதுமைப்பித்தன் ஆகியோர் தொடர்ந்து வளர்த்தனர். 1930 - 40 என்ற காலவெளியில் கிராம ஊழியன், சிவாஜி, எழுத்து போன்றவை புதுக்கவிதையைப்

போற்றி வளர்த்தன. அண்மைக் காலத்தில் 'எழுத்து' நின்றுவிட்ட போதிலும் நடை, கசடதபற, வானம்பாடி, அஃகு ஆகிய இதழ்கள் தொடர்ந்து பல புதுக் கவிதைகளையும் புதிய தமிழ்க் கவிஞர் களையும் அறிமுகப்படுத்திப் பரப்புகின்றன. புதுக் குரல்கள், பால்வீதி, கனவுகள், கற்பனைகள், காகிதங்கள், விதி, அன்று வேறு கிழமை, உதய நிழல், தமிழ்நாட்டின் கவிதைகள், தமிழன்பன் கவிதைகள், வைகறை முதலிய புதுக்கவிதை தொகுப்புகளும் வெளிவந்தன. இவையே அன்றிக் கதம்பம், அலைகள், புள்ளி, வெண்மை, உதயம், ரசிகன், நீ முதலிய குட்டிக் கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

"விருந்தே தானும்
புதுவது இனைந்த யாப்பின் மேற்றே"
என்று தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டில் ஒன்றான
விருந்தின் நூற்பாவைக் காட்டி விருந்தில் அடக்கலாம்
என்பர்.

முதன் முதலில் புதுக்கவிதை எழுதிய ஆங்கிலேய
அமெரிக்காவைச் சேர்ந்த வால்ட் விட்மன்.

வால்ட் விட்மன் எழுதிய புதுக்கவிதை நூலின் பெயர்
புல்லின் இதழ்கள் (Leaves of Grass)

தமிழில் முதன் முதலாகப் புதுக்கவிதை எழுத முயற்சி
செய்தவர் பாரதியார்

பாரதிக்கு வழிகாட்டி வால்ட் விட்மன்

பாரதி எழுதிய புதுக்கவிதை 'காட்சி' என்ற தலைப்பில்
இடம் பெற்றுள்ளது

தமிழ்ப் புதுக்கவிதையின் முன்னோடி நா. பிச்சமூர்த்தி

முதன் முதலில் புதுக்கவிதை வெளியிட்ட இதழ்
மணிக்கொடி

புதுக்கவிதை இதழ்கள்: மணிக்கொடி, எழுத்து, வானம்பா
ஞானரதம், இலக்கிய வட்டம், தாமரை, தீபம், வேள்
கணையாழி, கசடதபற, கஙய, ழ, ஃ, ஐ

எழுத்து இதழை 1959இல் தொடங்கியவர் சி.சு.செல்ல
வானம்பாடி: 1971இல் பல கவிஞர்கள் கூடிக் கோவை
தொடங்கினார்கள்

புதுக்கவிதைக்குத் தொடக்கத்தில் இருந்த வேறு பெய
உரைப்பா (பெருஞ்சித்திரனார்) உரைவீச்சு (ச
இளந்திரையன்), சொற்கோலம் (கண்ணதாசன்) குறும்பா,
நிலைப்பா, சுதந்திரப்பா, விடுதலைப்பா.

எழுத்துக் காலக் கவிஞர்கள்: பிச்சமூர்த்தி, தருமு சி
வைதீஸ்வரன், க.நா. சுப்பிரமணியம், பசவ
வேணுகோபாலன், சி.சு. செல்லப்பா, நகுலன்

புதுக்கவிதை குறித்து அறிஞர்களின் கருத்து :-

" இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி இவை
எதுவும் இல்லாத
கருத்துகள் தம்மைத்
தாமே ஆளக் கற்றுக்கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே புதுக்கவிதை"

— மு. மேத்தா

பாரதியார்

- இயற்பெயர் சுப்பிரமணியம் - சுப்பையா என அழைக்கப்பட்டார்
- பெற்றோர்: சின்னசாமி ஐயர் - லட்சுமி அம்மாள்
- ஊர் : எட்டயபுரம்
- வாழ்நாள்: 11.12.1882 முதல் 11.9.1921 வரை 39 ஆண்டுகள்
- எட்டயபுர சமஸ்தானப் புலவர்கள் 'பாரதி' என்ற பட்டம் அளித்தனர்
- அறிவில் சிறந்த இல்லறத்தார்க்குக் கொடுக்கப்படும் பட்டம் பாரதி
- ஞானத்தில் உயர்ந்த துறவிகளுக்குக் கொடுக்கப்படும் பட்டம் சரஸ்வதி
- பாரதி, சரஸ்வதி இரண்டுமே கலைமகளின் வேறு பெயர்கள்
- தன்னை 'ஷெல்லிதாசன்' என்று அழைத்துக்கொண்டார்
- புனைபெயர்கள்: காளிதாசன், சக்திதாசன், சாவித்திரி, ஓர் உத்தம தேசாபிமானி, நித்திய தீரர், ஷெல்லிதாசன்
- தம் பூணூலை கனகலிங்கம் என்ற ஆதி திராவிடர்க்கு அளித்தவர்
- புதுக்கவிதைக்கு முன்னோடி
- பாரதியின் புதுக்கவிதை முன்னோடி வால்ட் விட்மன்
- தம் பாடல்களுக்குத் தாமே மெட்டு அமைத்த கவிஞர்
- கவிதையில் சுயசரிதம் எழுதிய முதல் கவிஞர்
- 1905இல் சக்கரவர்த்தினி என்ற இதழ் தொடங்கினார்
- கர்மயோகி, பாலபாரத், (ஆங்கில இதழ்) ஆகியவற்றை நடத்தினார்
- சுதேசி மித்திரன் என்ற இதழின் துணையாசிரியர்
- 'இந்தியா' என்ற இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்

# 1. பாரதியார்

சின்னச்சாமி - இலக்குமியம்மாளின் புதல்வராக எட்டயபுரத்தில் பிறந்தார். இயற்பெயர் சுப்ரமணியன். சுப்பையா என்பது இவரது செல்லப்பெயர்.

செய்யுள் ஏட்டினை யாரும் திரும்பியும் பார்க்காதிருந்த நிலையில் கவிதையை மக்கள் இலக்கியமாக மாற்றிய பெருமைக்குரியவர் பாரதியார்.

**“நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்**
**இமைப்பொழுதும் சோராதிருத்தல்”-எனவும்**

“பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்” எனவும் கவிதை மூலமாக நாட்டிற்குத் தொண்டு செய்யும் அவாவை வெளியிட்டார். சமூகக் கொடுமைகளைச் சாடும் சாட்டையாகக் கவிதையைத் தம் கையில் ஏந்தினார். நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டவர்.

“சுதந்திர தேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே” என்பதுவே அவர் கொண்ட தாரக மந்திரமாக இருந்தது. பாரதியாரின் கவிதை களைத் தேசியப் பாடல்கள், பல்சுவைப் பாடல்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் எனப் பலவாறாகப் பகுத்துக் கூறுவர். அவற்றுள் கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகிய மூன்றும் முப்பெரும் கவிதைச் செல்வங்களாகப் போற்றப்படுகின்றன. கதைகள், கட்டுரைகள் ஆகியனவற்றையும் எழுதியுள்ளார்.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள தமிழ்த்தாய் என்ற கவிதையில் மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை என்ற குறையைப் போக்கித் தம் மக்கள் புதிய சரித்திரம் படைக்க வேண்டுமெனத் தமிழ்த்தாயை வேண்டுகிறார்.

# 1. தமிழ்த்தாய்

1. ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்.

2. மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்டநல் லன்போடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே - உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்.

3. கள்ளையும் தீயையும் சேர்த்து - நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

4. சாத்திரங் கள்பல தந்தார் - இந்தத்
தாரணி யெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்
நேத்திரங் கெட்டவன் காலன் - தன்முன்
நேர்ந்த தனைத்தும் துடைத்து முடிப்பான்.

5. நன்றென்றுந் தீதென்றும் பாரான் - முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல் - வையச்
சேர்க்கை யனைத்தையுங் கொன்று நடப்பான்.

6. கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு - பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

7. தந்தை அருள்வலி யாலும் - முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன் - என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

8. இன்றொரு சொல்லினைக் கேட்டேன் - இனி
ஏதுசெய் வேன்?என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்குக்
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

"புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்.
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

சொல்லவும் கூடுவ தில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்."

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடு வீர்எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!

தந்தை அருள்வலி யாலும் - இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்.

(4) 'ஆரிய மைந்தன்' என்றழைக்கப்படுபவர்

ஆரிய மைந்தன் அகத்தியன் ஆ

(5) மூன்று செந்தமிழ் மன்னர்கள் யாவர்?

* சேரர்
* சோழர்
* பாண்டியர்

(6) நேத்திரம் கெட்டவன் யார்

காலன் (எமன்)

(7) சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்! யாருடைய கூற்று?

பாரதியார்

⑧ "பஞ்சம் புதிய கலைகள்" கூறுவன யாவை?

பஞ்சம் புதிய கலைகள் பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவற்றின் நுட்பங்களைக் கூறுவதாக பாரதியார் கூறியுள்ளார்.

⑨ தம்பி என்று பாரதியால் அழைக்கப்பட்டவர் யார்?

பரலி சு. நெல்லையப்பர்

⑩ பாரதியார் நடத்திய பத்திரிக்கைகள் யாவை?

இந்தியா
கர்மயோகி
தர்மம்

## 5 மதிப்பெண் வினா-விடை

① 'வந்தே மாதரம்' எனும் கவிதை வாயிலாக பாரதியார் கூறும் ~~[illegible]~~ சிறப்புகளை எடுத்துரைக்க.

பாரதியாருடைய நாட்டு வணக்கம் என்ற பாடலில் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே - அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே - அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் வளர்ந்து சிறந்ததும் இந்நாடே. இதனை வந்தனை கூறி மனதில் இருத்தி என் வாயுற வாழ்த்தேனோ? இதை வந்தே மாதரம், வந்தே மாதரம் என்று கூறி வணங்கேனோ? என்று தாய் நாட்டின் மேன்மையை எடுத்துரைத்துள்ளார்

② மூன்று இந்த தமிழ் மன்னர்கள் குறித்து தமிழ்த்தாய் கூறுவன யாவை?

தமிழ்த்தாய் கவிதை வாயிலாக பாரதியார் தமிழின் பெருமைகளையும் அது வளர்ந்த விதத்தினையும் கூறியுள்ளார்.

ஆதிசிவன் பெற்றுவிட்டான் - என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்

மூன்று குலத்தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் தன்னை மூண்ட நல் அன்போடு நித்தம் போற்றி: வளர்த்தினர்

உலக மொழிகளுள் உயர்வென ஆரியத்திற்கு நிகராக என்னை போற்றி வளர்த்தின் -னர் என்று தமிழ்தாய் கூறுவதாக பாரதியார் பாடியுள்ளார்.

'மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்ட நல் லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளினுள்ளே - உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்'.

2 - மதிப்பெண்கள்

(1)

பாரதிதாசன் குறிப்பு வரைக.

பிறப்பு : ஏப்ரல் 29, 1891

தந்தை : கனகசபை

தாய் : இலக்குமி அம்மாள்

பிறந்த இடம் : பாண்டிச்சேரி

இயற்பெயர் : கனகசுப்ரத்னம்

புனைபெயர் : பாரதிதாசன்

தொழில் : தமிழாசிரியர், கவிஞர், அரசியல் -வாதி

இறப்பு : 21, ஏப்ரல் 1964

சிறப்புப் பெயர் : புரட்சி கவிஞர் என்றும் பாவேந்தர்

(2) பாரதிதாசன் யார்மீது பற்றுக் கொண்டவர்?

பாரதியார் மீது பற்றுக் கொண்டவர்.

(3) பாரதிதாசன் படைப்புகளுள் ஏதேனும் நான்கினை எழுதுக.

* அழகின் சிரிப்பு
* குடும்ப விளக்கு
* இருண்ட வீடு
* பாண்டியன் பரிசு, குறிஞ்சித்திட்டு

4. பாரதிதாசன் இயற்றிய அந்த நூலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது?

பிசிராந்தையார் (உரைநடை நாடக நூல் 1970)

5. பாரதிதாசன் உரை எழுதிய நூல் எது?

திருக்குறள்

6. பாரதிதாசன் நடத்திய இதழின் பெயர் யாது?

குயில்

7. கல்லாத பெண்களின் இழிவைக் கூறும் நூல் எது?

இருண்ட வீடு

8. சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றவள் யார்?

அழகு

9. எதுவ வசப்பட்டால் துன்பமில்லை என்று கவிஞர் கூறுகிறார்?

நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை என்கிறார்.

(10) அமிழ்தம் என்பது எதனைக் குறிக்கும்?

அமிழ்தம் என்பது இனிமையைக் குறிக்கும்

(11) 'புரட்சிக்கவி' என்று கவிஞரைப் பாராட்டியவர் யார்?

1946 ஜூலை 29-இல் அறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டு ரூ 25,000 வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

5 மதிப்பெண் வினா-விடை:

(1) 'அழகு' கவிதை வாயிலாக கவிஞர் உணர்த்தும் செய்திகளைத் தொகுக்க.

காலையிளம் பரிதியிலே, அவனைக் கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்,
தொட்ட இடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டான்;
மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற - ஒளிவிசு
மாணிக்கச் சுடரிலவன் இருந்தான்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த 'அழகெ'ன்பாள் கவிதை தந்தாள்

என்று இயற்கை அழகை வர்ணித்துள்ளார்.

10 மதிப்பெண்

2. தோழனே! உன்னிடம் சொல்வேன்! கவிதை உணர்த்தும் கருத்தை விவரிக்க.

பாரதிதாசன் - அறிமுகம்

பாரதிதாசன் 29.4.1891 ஆம் நாள் புதுச்சேரியில் பிறந்து, பெரும் புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் கனகசுப்புரத்தினம். தமிழாசிரியராக பணியாற்றிய இவர் சுப்பிரமணிய பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார்.

இவர் இக்கவிதையின் வாயிலாக இளம் படைப்பாளர்களுக்குச் சில அறிவுரைகளைக் கூறியுள்ளார்.

அலையடிக்கும் இனிமை:

அமிழ்தம் என்ற சொல் இனிமையைக் குறிக்கும். அந்த இனிமை செந்தேன், கரும்பு, மா, பலா, வாழை என்ற முப்பழங்களிலும் தோன்றும் என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார். ஆண்கள் நிலத்தை உழுது, விளைவித்த நெல்மணிகளைக் கற்புடைய பெண்கள் அரிசியாக்கி பாலில் குழைத்து நெய்யும் வெல்லமும் சேர்த்து ஏலமும் பருப்பும் இட்டு அதை அன்போடு இலையில் வைக்கும் போது பொங்கலின் இனிமை அலையடிக்கும். இதனைப் பாவேந்தர் பின்வரும் வரிகளில் கூறியுள்ளார்.

"தாய் மாறா தமிழ்ப்பண் சொல்லில்
இந்திய அரிசி பாலிற் சேழயப்
முந்திருக்கு நெய்யும் வெல்லமும் புணர
ஏலமும் பருப்பும் ஏலம் மணக்கத்
தோழர்க்கிட்ட பழத்தொடும் அன்பொடும்
இலையிலிட்ட பொங்கலின் இனிமை
அனையதாகும்!"

புதுக்கருத்து:

பெரிய திரைப்படத்திற்கு கதை, வசனம், திரைக்கதை எழுதும் படைப்பாளனே! நீ உன் மனதை உறுதியாய் தோண்டினால் அதிலிருந்து புதுக்கருத்துக்கள் வெள்ளம் போல் விரைந்து பாய்ந்துவரும் என்று பாவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

"நீயே எண்ணி நீயே எழுதுக!
உள்ள மதனை உறுதியால் தோண்டினால்
வெள்ளப் புதுக்கருத்து விரைந்து பாயும்".

அறிவுரைகள்:-

பிறர் எழுதிய பாட்டின் அடியைத் திருடாதே! பிறர் எழுதிய பாட்டிலிருந்து சொற்களைத் திருடாதே! பிறரின் கருத்துக்களைத் திருடி அவற்றை உன் கருத்தாக எழுதாதே! பிறரின் பேச்சினைக் கேட்டு அவற்றிலிருந்து நல்ல சொற்களை எடுத்து அவற்றை உன் சொல்லாகக் கூறாதே! இவ்வாறு நீ திரைப்படம்

திரைப்படம் எடுப்போருக்குப் பாரதிதாசன் அறிவுரை வழங்கியுள்ளார்.

"அயலார் பாட்டின் அமைவைத் தொடாதே
அயலார் பாட்டின் சில சொல் அகற்றி
உன் பாட்டென்று உரைக்க வேண்டாம்
பிறரின் கருத்தைப் பெயர்த்தெடுக்காதே
பிறரின் பேச்சின் சொல் தொட வேண்டாம்."

<u>நம்மை மதிக்க மாட்டார்கள்</u>:

"அமைவைத் திருடிச் சொல்லைத் திருடிப்
பிழைத்த வழக்கம் அயலார் படைத்த
கலையே திருடும் நோயும் இனதே!"

இவ்வாறு செய்தால், பிற மாநிலத்தவர்கள் தமிழகத்தை மதிக்க மாட்டார்கள் என்று பாரதிதாசன் குறிப்பிட்டுள்ளார்.

## III. முடியரசன் கவிதைகள் [தலைமை வகிப்பவர்

### 2 மதிப்பெண் வினா

1) கவிஞர் முடியரசனின் இயற்பெயர் என்ன?

கா. சு. துரைராசு

2) முடியரசன் பிறந்த ஊர் எது?

1920-ல் தேனி மாவட்டம் பெரிய குளத்தில் பிறந்தார்.

3) திராவிட இயக்கக் கவிஞர் யார்?

கவிஞர் முடியரசன்.

4) முடியரசன் படைப்புகளுள் ஏதேனும் நான்கினை எழுதுக.

* காவியப்பாவை
* வீரகாவியம்
* முடியரசன் கவிதைகள்
* பூங்கொடி
* ஊன்றுகோல் (நாடகம்)

7. கவிஞர் முடியரசனை தமிழ்நாட்டின் வானம்பாடி எனப் புகழ்ந்தவர் யார்?

அறிஞர் அண்ணா

8. சுரண்டலையும் பதுக்கலையும் ஒழிப்போம் என்று தமது கவிதை வாயிலாகச் சாடியவர் யார்?

கவிஞர் முடியரசன்

9. புதுநெறி முறைகளில் உழைப்போம் என்றவர் யார்?

கவிஞர் முடியரசன்

10. உலக மக்கள் அனைவரும் எவ்வாறு வாழ வேண்டும் என்று கூறுகிறார்?

உலக மக்கள் அனைவரும் ஒரு சரிநிகரென இருப்போம் என கூறியுள்ளார்.

11. 'கவியரசு' என்ற பட்டம் யாரால் கவிஞருக்கு வழங்கப்பட்டது?

குன்றக்குடி அடிகளாரால் வழங்கப் -பட்டது.

(பறம்பு மலையில் நடந்த விழாவின்போது)

## நெடுவினா

① கவிஞரின் 'தனைமை மதிப்போம்' என்ற தலைப்பில் கூறும் பொதுவுடைமைக் கருத்துக்களைக் கூறுக

### விதிமுறை

பிறரின் உழைப்பினைச் சுரண்டுபவர்களையும் உற்பத்திப் பொருட்களை அதிக விலைக்கு விற்க நினைத்து அவற்றைப் பதுக்கிவைக்கும் செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குபவர்களையும் அவர்களுக்குத் துணையாக இருப்போரையும் பழித்துரைக்க வேண்டும். அத்தகையோரின் செயல்களைத் தவிர்க்கும் வகையில் விதிமுறைகளை வகுக்க வேண்டும் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

### மதிக்க வேண்டியனவும் மிதிக்க வேண்டியனவும்.

கவிஞர் முடியரசன், மனித உழைப்பினை மதிக்க வேண்டும் என்றும் கொடுமையான வறுமையை மிதித்து அழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"மனிதனை உழைப்பினை மதிப்போம் - கொடு
வறுமையை இடரினை மிதிப்போம்
இனிய நல் உலகினைப் படைப்போம்"

பெண்க கொள்கையும் ஆண்க கொள்கையும்

பணக்காரர், ஏழை என்ற ஏற்றத்தாழ்வுகளை உலகில் நிலைநாட்டும் என்ற நிலையை வேறுபாடுகளை நாளைய உலகின் நாகரிகம் என்று கோட்பாடு கொள்கை வேண்டாம் என்ற கவிதை தீட்டியுள்ளார்.

"காளை வயலினை செய்வோம் - நம்
கடமை உரிமை மதிப்போம்
பெண்மை அருமையை காப்போம் - நம்
மேனியை உழைப்பினை வளர்ப்போம்"

ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை, அனைத்தையும் விலக்க வேண்டும் என்கிறார்.

ஏழைக் கொள்கையும் எளிய கொள்கையும்

"வயல்களில் உழைப்பினைக் கொடுப்போம்
- அந்த
உழவன் அனைத்தையும் எடுப்போம்
பயிரில் களையும் விடுப்போம் - உழைப்பால்
வியர்த்திடும் மேனிகளை மதிப்போம்"

பொதுவுடைமையில் நாடு சார்ந்தல்

பொருட்களை உற்பத்தி செய்யும் புதிய யந்திரங்களையும் நீண்ட நெய்யும் நூல்களையும்

உருவாக்கி பயன்படுத்த வேண்டும். அதில் நெறிமுறைகளோடு உழைக்க வேண்டும். அதன் வழியாக நாட்டின் நிலையை வளப்படுத்தி உயரச் செய்ய வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார்.

"புதுமுறை உலகினைப் படைப்போம். அங்கே
பொதுமையில் அறநெறி விதிப்போம்
உதவிடும் மனத்தோடு சிறப்போம். உலகில்
ஒரு சரிநிகரென இருப்போம்"

என்ற புதிய முறையில் உலகினை உருவாக்க வேண்டும் என்றும் அந்தப் புதிய உலகில் பொதுவுடைமை என்ற அறநெறியை விதிக்க வேண்டும் என்கிறார்.

நாம் உலகில் அனைவரும் சரிசமம் என்ற நிலையில் வாழ்வோம் என்று கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

# தலைமை வகிப்போம்!

நம் உடல் அடையும் சோர்வை நமது பகை என்று நினைத்து அதனைத் தகர்க்க வேண்டும். ஒவ்வொரு நாளும் தத்தமது கடமையிலிருந்து தவறாமல் உழைக்க வேண்டும். வெளிநபர்கள் நமது உழைப்பை சுரண்ட நினைத்தால் அவர்களைத் திருத்தி அணியில் நாமும் சேர்த்துக்கொண்டு, அதன் தலைமை வகித்து எதிரிகளை விரட்டியடிக்க வேண்டும் என்று கவிஞர் கூறியுள்ளார்.

4. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

1. மனிதனாக வாழ்ந்திட வேண்டும்

2 மதிப்பெண்கள் :

① மக்கள் கவிஞர் யார்?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

② வாழ்க்கை குறிப்பு :

பிறப்பு : ஏப்ரல் 13, 1930

செங்கப்படுத்தான்காடு

இறப்பு : அக்டோபர் 8, 1959

தொழில் : பல தொழில்

நாட்டுரிமை : இந்தியா

துணைவர் : கௌரவம்மாள்

③ இவருடைய பாடல்கள் வெளிவந்த இதழின் பெயர் கூறுக?

ஜனசக்தி

④ உழவர்களின் வறுமையைப் பாடியவர்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

⑤ நான் ஒரு பேட்டை, அவர் ஒரு கோட்டை என்று கூறியவர் யார்?

உடுமலை நாராயணகவி

(6) 'எங்கள் வங்கத்தைக்' என்று பாரதிதாசனால் புகழப்பட்டவர்?

பட்டுக்கோட்டையார்.

(7) ஏழைகள் நாற்று; ஏரியவர் நெய்தல் என்றவர் யார்?

நாமக்கல் கவிஞர் அவர்.

(8) ஆசையோடு என்றவருக்கு நீ தரும் மகிழ்ச்சி யாது?

ஆளும் வளரணும் அறிவும் வளரணும் அது
-தாண்ட வளர்ச்சி
அதுதான் உன்னை என்றவருக்கு நீ தரும்
மகிழ்ச்சி ஆகும்.

(9) நரம்போடு பின்னி வளர்வது எது?

நரம்போடு பின்னி வளரணும் தன்மான
உணர்ச்சி என்று கவிஞர் கூறியுள்ளார்.

(10) வளரும் உலகத்துக்கு நீ எதுவாக இருக்க வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?

வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையாக இருக்க வேண்டும் என்கிறார்.

(11) எதை மாய்வதற்கு 'தொண்டு செய்யடா' என்று கவிஞர் கூறுகிறார்?

தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்ய வேண்டும். என்று கூறியுள்ளார்.

## 1. மனிதனாக வாழ்ந்திட வேணும்

சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா!
சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா! - நான்
சொல்லப்போற வார்த்தையை நல்லா
எண்ணிப்பாரடா - நீ எண்ணிப்பாரடா
சின்னப் பயலே சின்னப் பயலே சேதி கேளடா!

ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி
ஆளும் வளரனும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி - உன்னை
ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி-உன்னை
ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே நீ தரும் மகிழ்ச்சி!

நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்
காலம் தரும் பயிற்சி - உன்
நரம்போடுதான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி - உன்
நரம்போடுதான் பின்னி வளரணும்
தன்மான உணர்ச்சி! (சின்னப்)

மனிதனாக வாழ்ந்திட வேணும் மனதில் வையடா-
தம்பி மனதில் வையடா!
மனிதனாக வாழ்ந்திட வேணும் மனதில் வையடா-
தம்பி மனதில் வையடா!
வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையடா
-நீ வலது கையடா!
வளர்ந்து வரும் உலகத்துக்கே நீ வலது கையடா
-நீ வலது கையடா!
தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா
- நீ தொண்டு செய்யடா!
தனியுடைமைக் கொடுமைகள் தீரத் தொண்டு செய்யடா
-நீ தொண்டு செய்யடா!
தானா எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா!
- எல்லாம் பழைய பொய்யடா!

# 5. கண்ணதாசன்

கவியுலகமேதை கண்ணதாசனின் இயற்பெயர் அழகா. முத்தையா, சிவகங்கை மாவட்டம் சிறுகூடற்பட்டியிலே பிறந்த இவர் தமிழுக்கோர் வரப்பிரசாதம். கம்பனிடம் சொற்கள் இடங்கேட்டு நின்றனபோல் சொற்கள் இவர் கட்டளைக்குக் காத்துக் கிடந்தன. தமிழ்க் கவிதை யுலகில் பாரதி, பாரதிதாசனுக்குப் பின் இவரே புகழ்க் கவிஞர். திரைப்படப்பாடல்களுக்கு மதிப்பு இலக்கிய நிலையும் பெற்றுத்தந்த பெருங்கவி. இரங்கற்பாக்கள் தன்னுணர்ச்சிப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் போன்றவற்றில் தலைசிறந்து நின்றவர்.

கண்ணதாசன், தென்றல் என்ற இரண்டு பத்திரிகைகளை நடத்தினார். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை, கவிதாஞ்சலி, பொன்மழை, அம்பிகை அழகு தரிசனம், அர்த்தமுள்ள இந்து மதம், கண்ணதாசன் கவிதைகள் 7 தொகுதிகள் ஆகியன. அவருடைய கவிதைகளில் சில முன்னோர் சொல், சொற்றொடர் கருத்துக்களைப் பொன்னே போல் பொருந்த ஆளும் பெருந்தகையர்.

தத்துவ ஞானிகளும் விளக்க முடியாது திணறிய அரிய கருத்தை

**"பூஜ்ஜியத்துக்குள்ளே ஒரு**
**ராஜ்ஜியத்தை ஆண்டு கொண்டு**
**புரியாமலே இருப்பான் ஒருவன் - அவனைப்**
**புரிந்து கொண்டால் அவன்தான் இறைவன்"**

என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

இவருடைய கவிதைகள் பாட்டுக்குப் பாட்டு பட்டறிவும், அனுபவ வார்ப்பும் உடையன. காலத்தை வென்று கவிஞரான இவர் பாடல்களில் தத்துவம் தலையோங்கி நிற்கின்றது. வாழ்க்கை வாழ்வதற்கே என்று முழுமையாக அனுபவித்து, கடைசியில் அந்த நாலு பேருக்கு நன்றி சொன்ன கவிஞர் இவர். மனம் எப்படிப் பட்டது என்பதைக் காட்ட மனிதனின் கேள்விக்கு இறைவனின் பதிலை உணர்த்தும் 'நீ மணி; நான் ஒலி! கவிதை பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

## 1. நீ மணி; நான் ஒலி!

பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்

அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்து பாரென இறைவன் பணித்தான்
அன்பெனப் படுவது என்னெனக் கேட்டேன்
அளித்துப் பாரென இறைவன் பணித்தான்

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்து பாரென இறைவன் பணித்தான்

பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப் பாரென இறைவன் பணித்தான்
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்து பாரென இறைவன் பணித்தான்

வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

அனுபவித் தேதான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவ னேநீ ஏன் எனக் கேட்டேன்
ஆண்டவன் சற்றே அருகு நெருங்கி
அனுபவம் என்பதே நான்தான் என்றான்!

நீ மணி; நான் ஒலி! கவிதை வாயிலாக அறியலாகும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

கவிஞர் கண்ணதாசனின் நீ மணி; நான் ஒலி! எனும் கவிதையில் மனிதன் இறைவனிடம் கேள்விக் கேட்பதாகவும், இறைவன் அதற்கு பதில் கூறுவதாகவும் அமையும்படி இக்கவிதையினை இயற்றியுள்ளார்.

"பிறப்பின் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்து பாரென இறைவன் பணித்தான்
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப் பாரென இறைவன் பணித்தான்"

அறிவு என்று ஒன்று சொல்லப்படுகிறதே அது யாதெனக் கேட்டதற்கு இறைவன் அறிந்து பாரெனக் கூறியுள்ளார்.

இதே போல், அன்பு எனப்படுவது என்னவென்று கேட்டதற்கு அளித்துப் பாரென இறைவன் கூறுவதாகக் கவிஞர் கூறியுள்ளார்.

பிறர்க்கு கொடுத்து வாழ்வதுதான் உண்மையான அன்பு.

பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்து பாரென இறைவன் பணித்தான்
வறுமை என்பது என்னெனக் கேட்டேன்
வாடிப் பாரென இறைவன் பணித்தான்
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்து பாரென இறைவன் பணித்தான்

இப்படி ஒவ்வொன்றையும் அனுபவித்து தான் அறிவது வாழ்க்கையெனில் ஆண்டவனே நீ ஏன் ? எனக் கேட்டதற்கு இறைவன் கூறிய அந்த அனுபவமே நான்தான் என்றார். இவ்வாறாக நீ மனி ; நான் ஒளி) கவிதையின் வாயிலாக கவிஞர் வாழ்க்கையின் அனுபவங்களைக் கூறியுள்ளார்.

# 6. நா. காமராசன்

(1942- ...
...
...

## 1. காகிதப் பூக்கள்

நா. காமராசன் தமிழ் புதுக்கவிதை இயக்க முன்னோடியும் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியரும் ஆவார். தொடக்கத்தில் மரபுக் கவிதைகள் எழுதி வந்த இவர் காலப்போக்கில் வசனகவிதை, புதுக்கவிதை ஆகிய துறைகளுக்கு மாறி அவற்றிலே தன் சிறப்பை வெளிப்படுத்தினார். கிராமியச் சந்தங்களுடன் புதுப்பார்வை திகழப் படிமக் கவிதைகள் பலவற்றை எழுதியுள்ளார். இவர் ஒரு உருவகக் கவிஞர் ஆவார். அழகான கவிதைகளால் பொருத்தமற்ற கொள்கை களைச் சாடும் காமராசன், "கவியரசு, சோசலிசக்கவிஞர், புதுக் கவிதையின் முன்னோடி, புதுக்கவிதை ஆசான்" என்று அழைக்கப் படுகிறார்.

"தன் கால்களில் இரத்தம் கசியக்கசிய பழைய முட்பாதைகளில் முன்னேறி முதலில் புதுக்கவிதை உலகுக்கு ஒரு புதுப்பாதை அமைத்தவன் நா. காமராசன்தான் என்பதை மூர்ச்சை அடைந்தவன் கூட மறந்து விடக்கூடாது" என்று கவிஞர் வைரமுத்துவால் புகழப்பட்டவர். இவர் கலைமாமணி விருது, சிறந்த பாடலாசிரியர் விருது, பாரதிதாசன் விருது ஆகிய விருதுகளைப் பெற்ற சிறப்பிற்குரியவர்.

### (திருநங்கைகளைப் பற்றிய கவிதை)

காலமழைத் தூறலிலே
களையாப் பிறப்பெடுத்தோம்
தாய்ப் பாலின் சரித்திரத்தில்
சதுராடும் புதிரானோம்.
விதைவளர்த்த முள்ளானோம்
விளக்கின் இருளானோம்
சதைவளர்க்கும் பிணம்நாங்கள்
சாவின் சிரிப்புகள்
மூங்கையொரு பாட்டிசைக்க
முடவனதை எழுதிவைக்க
முடவன்கை எழுதியதை

முழுக்குருடர் படித்ததுண்டோ?
மூங்கையனின் பாட்டானோம்
முடவன் கை எழுத்தானோம்
முழுக்குருடர் படிக்கின்றார்
சந்திப் பிழை போன்ற
சந்ததிப் பிழை நாங்கள்!
காலத்தின் பேரேட்டைக்
கடவுள் திருத்தட்டும்!
தலைமீது பூவைப்போம்
தாரணியோர் கல்லறையில்
பூவைத்தல் முறைதானே?
பூத்த உயிர்க் கல்லறைகள் நாங்கள்!
தாய்ப்பெண்ணோ முல்லைப்பூ
தனி மலடி தாழம் பூ
வாய்ப்பந்தல் போடுகின்ற நாங்கள்
காகிதப் பூக்கள்!

திருநங்கைகளைப் பற்றிய நா. காமராசனின் கருத்துக்களை விவரிக்க.

அலிகள் என சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் இவர்கள் பின் அரவாணிகள் என்றும் இன்று திருநங்கைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களை நா. காமராசன் அவர்கள் காகிதப் பூக்கள் என்கிறார். அவர்களைப் பற்றி அவர் எழுதிய ஒருவகைக் கவிதையை பார்ப்போம்.

காலம் என்ற மழைத்தூறலில் களையாகப் பிறப்பெடுக்கின்றோம். தாய்ப்பாலின் சரித்திரத்தில் சுவரொ புதிராக ஆனோம். விதை வளர்த்த முள்ளாக ஆனோம். சுடர் விளக்கின் இருளாக ஆனோம். சதை வளர்க்கும் பிணங்கள் நாங்கள். சாவின் சிரிப்புகள் ஆனோம்.

ஊமை பாட்டிசைக்க, கையில்லா முடவன் அதை எழுதிவைக்க, குருடர் அதனைப் படித்தா என்ன பயன் விளையும்?

அப்படிப்பட்ட ஒரு பயனற்ற வாழ்வு எங்களுடைய

நாங்கள் சந்திப்பிழை போன்ற சந்ததிப் பிழைகள்.
காலமென்னும் ஏட்டில் திகழ்ந்துவிட்ட பிழைகள்.
எங்கள் வாழ்வு பிழை புள்ள, பொருளற்ற வாழ்வு

நாங்கள் பூச்சூடினால் கல்லறைக்குப் பூ வைத்தது போல இருக்கும். பூச்சூடி உலவினாலும் கூட, நாங்கள் பூத் கல்லறை போன்று உயிரற்ற உடலத்தின் மீது பூ வைத்தது போல இருக்கும்

எங்களைப் பெற்றெடுத்த தாய்மார்கள், தாய்மை மணப்பதனால் மணம் வீசும் மல்லிகைப் பூ போன்றவர்கள். தனிமலராக விளங்கும் ஒவ்வொருவரும் தாழம்பூப் போன்றவர்கள். வாய்ப்பேச்சால் வக்கணையாகப் பேசும் நாங்களோ மணம் சிந்தும் அற்ற காகிதப் பூக்கள்

இன்றைய காலகட்டத்தில் அரசு திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக அங்கீகரிக்கின்றது.
திருநங்கை என்ற அழகான பெயர் சூட்டியுள்ளது.
சமுதாயத்திலும் மக்களிடையே இவர்களுக்கு அங்கீகாரம் கிடைத்து வருகின்றது.

ஆயினும் நா. காமராசரின் இக்கவிதை அவர்களின் மனக்குமுறலை அழகாக எடுத்துக் கூறுகிறது.

## 7. மீரா- ஊசிகள்

மீரா என்ற மீ. ராசேந்திரன் 1938 ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தவர். சிவகங்கைக் கல்லூரியில் படித்து அங்கேயே பேராசிரியராகவும் பணியாற்றியவர். கவிதை, கதை, கட்டுரை என 18 நூல்களைப் படைத்துள்ளார்.

### 1. எதிரொலி

பெரிய நாட்டின்
பிரதமர் பொறுப்புடன்
மந்திரி மார்கள்
மத்தியில் சொன்னார்:
“விருந்தைக் குறைப்பீர்!
வெளிநாட்டுக்குப்
பறந்து போகும்
பழக்கம் குறைப்பீர்
தொலைபேசியிலே
சலசல வென்றே
பேசித் தொலைப்பதைப்
பெரிதும் குறைப்பீர்
குளுகுளு காரில்
கூட்டங்களுக்குச்
செல்வதைக் குறைப்பீர்
செலவைக் குறைப்பீர்...!”
எங்கோ இருந்தோர்
எதிரொலி கேட்டது:
“பிரியம் மிகுந்த
பிரதமரே
உமது
மந்திரி சபையின்
எண்ணிக்கையை நீர்
கொஞ்சம் குறைப்பீர்
கொஞ்சம்.........”

## 2. கடமையைச் செய்...

பத்து மணிக்குச்
சரியாய் நுழைந்தேன்
கூட இருப்போரிடத்தில்
கொஞ்சம்
குசல விசாரணை
தலை வலித்தது.
தேநீர் குடிக்க
நாயர் கடைக்கு நடந்தேன்
ஊரில் இருந்து
யாரோ வந்தார்
ஒருமணி நேரம்
உரையாடல்
இடையில்
உணவை மறக்கலாமா?
உண்டு தீர்த்த
களைப்புத் தீர
ஒரு
கன்னித் தூக்கம்
முகத்தை அலம்பிச்
சிற்றுண்டி நிலையம்
சென்று திரும்பினேன்
வேகமாய்
விகடனும் குமுதமும்
படித்து முடித்தேன்
மெல்லக்
காகிதக் கட்டை எடுத்துத்
தூசியைத் தட்டித்துடைத்துக்
கடமையைச் செய்யத்
தொடங்கும் போது...
கதவை அடைத்தான்
காவற்காரன்
மணி ஐந்தாயிற்றாம்!

குறிப்பு :

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சிவகங்கையில் 10.10.1938-ல் பிறந்தார் பெற்றோர் - மீனாட்சி சுந்தரம் - இலட்சுமி அம்மாள். இளம்பருவத்தில் பர்மாவில் (மியான்மர்) வளர்ந்தார். 01.09.2002 -ல் மறைந்த சிவகங்கைச் சீமையின் கவிதைக் குரல்.

கல்வி : மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டம் பெற்றார். கவிஞர் அப்துல் ரகுமான் இவரது வகுப்புத்தோழர். கவிதை நண்பர்

பணி : 1962 முதல் சிவகங்கை மன்னர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிதொடங்கினார். முதல்வர் பொறுப்பு வரை உயர்ந்து ஓய்வு பெற்றார்.

விருதுகள் : தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு, பாவேந்தர் விருது, கிர்ர இலக்கிய விருது, தமிழ்ச் சான்றோர் பேரவை விருது, அப்துல் ரகுமான் வழங்கிய பேரவை விருது, கவிஞர் சிற்பி அறக்கட்டளை வழங்கிய வாழ்நாள் சாதனையாளர் விருது.

ஊசிகள் (1974 - ஆண்டு முதற்பதிப்பு வெளிவந்தது.)

தற்போது எட்டு பதிப்புகளைத் தாண்டி வந்து விட்ட இவர் அன்று எழுதிய அரசியல் அசல் கவிதைகள் இன்றும் பொருந்துவதாக உள்ளது. அரசியல் வாதிகள் என்றும் மாறுவதில்லை என்பதை உணர்த்துகின்றன.

# 8. கந்தர்வன்

**கந்தர்வனின்** இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் என்னும் ஊரைச் சார்ந்தவர். கணேசன், கனகம்மாள் ஆகியோருக்குப் பிறந்தவர். 29 வயதில் அரசுப்பணிக்கு வந்த கந்தர்வன் தொழிற்சங்கவாதியாகத் தீவிரமாக இயங்கியவர். அவசரநிலை காலத்தில் 19 மாதங்கள் வேலையிழந்து பின்னர் மீண்டும் பணியேற்றவர். **70-களின்** தொடக்கத்தில் உருவான மக்கள் எழுத்தாளர் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களில் ஒருவர். பின்னர் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் துணைத்தலைவராகித் தம் இறுதிக்காலம் வரை பங்களிப்புச் செய்தவர். எழுத்தாளர் **ஜெயகாந்தனால் "இலக்கியச் சிந்தனை"** விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட இவரது **"மைதானத்து மரங்கள்"** கதை, 12-ஆம் வகுப்பு தமிழ்த் துணைப்பாட நூலில் பாடமாக இடம்பெற்றது. பல கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டத்தில் இடம்பெற்ற இவருடைய படைப்புகள் குறித்துப் பலரும் ஆய்வு நிகழ்த்தி வருகின்றனர். ஆண்டுதோறும் இவரது நினைவாகச் சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தப்பட்டு பரிசு வழங்கப்படுகிறது. கிழிசல்கள், மீசைகள், சிறைகள், கந்தர்வன் கவிதைகள் இவருடைய கவிதை நூல்களாகும். சாசனம், பூவுக்குக் கீழே, கொம்பன், ஒவ்வொரு கல்லாய், அப்பாவும் மகனும் ஆகியவை இவரது சிறுகதை நூல்களாகும்.

## புதிய கல்வி

கல்வி கற்பதும்
கல்வி கற்பிப்பதும்
புனிதம்
கற்பவன் காசு கொடுத்து
சீட்டைப் பிடிக்க
கல்வி கற்பதும்
கல்வி கற்பிப்பதும்
புனிதம்

பழைய கல்வி
பல்விழுந்து

புதிய கல்வி முறை குறித்து கவிஞர் கூறுவன:

"கேடில் விழுச்செல்வம் கல்வி" என்பது வள்ளுவர் வாக்கு. கல்வி ஒருவனுக்குக் கண் போன்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்விச் செல்வத்தைப் பற்றி இந்த "கல்வி கவிதைகள்" பேசுகின்றன. வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் கல்வியும் கற்றல் முறை மாறியாகின்றன. தற்காலத்தில் கல்வி கேவலம் ஒரு உயர்ந்த ஒரு வியாபாரப் பொருளாகவே மாறிவிட்டது. கல்வி அரசியலாக்கப்பட்டுவிட்டது. கல்வி பற்றிய செய்திகளையும் சமூகப் பார்வைகளையும் அழகாக கவிதைகளில் எடுத்துரைக்கின்றது.

கல்வி கற்பதும்
கல்வி கற்பிப்பதும்
புனிதம்.
கற்பவன் காசு கொடுத்து
சீட்டைப் பிடிக்க
கல்வி கற்பதும்
கல்வி கற்பிப்பதும்
புனிதம்

என்ற கல்வி இன்றைய காலகட்டத்தில் வியாபார
மாக்கப்பட்டுள்ளது என்பதனை கூறுகிறார் கவிஞர்.

பழைய கல்வி
பல்விழுந்தது
படுக்கையில் விழிக்கையில்
புதிய கல்வி
பல் இணைந்து வருகிறது
உதட்டைத் தாண்டி
தாடை வரை வளர்ந்த
டிராகுலாப் பற்கள்

இந்திய மக்கள் ஈவிரக்கமற்றவர்கள். குழந்தைகள் மேல் கொஞ்சமும் இரக்கம் இன்றி பதைபதைக்கும் வெயிலில் பள்ளிக்கு நடக்கவிடும் பாதகர்கள் ஆவார்கள்.

மேலும் அரசு ஆரம்பப் பள்ளிகளை மூடவிட்டு அங்கன்வாடிகளில் கற்கச் செல்லும் ஆணை பிறப்பித்துள்ளது.

வசதி படைத்த மாணவர்களும் ஏழை மாணவர்களும் எத்தனை காலம்தான் ஒரே பள்ளியில் படிப்பது, அதனால் தான் நகராட்சிப் பள்ளிகள், நவோதயாப் பள்ளிகள் என இரு பிரிவாக்கியுள்ளனர் என கவிஞர் இன்றைய கல்வி முறையை சாடுகிறார்.

# 9. அப்துல் ரகுமான்

**அப்துல் ரகுமான்,** (நவம்பர் 9, 1937- **ஜூன் 2, 2017**), தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப்பேராசிரியரும் ஆவார். **கவிக்கோ** என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். 'வானம்பாடி' இயக்கக் கவிஞர் களோடு இணைந்தியங்கியவர். எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகப் புதுக்கவிதைத் துறையில் நிலைநிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரகுமான் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் **பால்வீதி** என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி புரிந்தவர். அறிவுமதி உள்ளிட்ட இளந் தலைமுறை கவிஞர்களுக்கு ஆசானாக விளங்கினார். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காகச் சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.

## 1. கனவு

**கனவு காணாதவர் யாரும் இல்லை**
**இயற்கையும் கூடக்**
**கனவு காண்கிறது**
**மேகத்தின் கனவு வானவில்**
**இரவின் கனவு நட்சத்திரங்கள்**
**பூமியின் கனவு பூக்கள்**
**சூரியனின் கனவு நிலவு**
**ஆணின் கனவு பெண்**
**கண்ணீரின் கனவு புன்னகை**
**சொற்களின் கனவு கவிதை**
**உண்மையின் கனவு பொய்**
**கடவுளின் கனவு நாம்**
**எனவே, நமது கனவு**
**கனவின் கனவு!**

கனவுகள் நம்மை எங்கு அழைத்து செல்கிறது என்கிறார்

கவிஞர் ?

கனவுகள் நம்மைப் புதிய கரைகளை

நோக்கி அழைத்த கலங்களை விளக்கின்

என்கிறார்.

கனவு குறித்து கவிக்கோவின் புதிய சிந்தனைகளைப்

புலப்படுத்துக.

கனவு காணாதவர் யாரும் இல்லை.

இயற்கைக் கூடக் கனவு காண்கிறது. என்று கவிஞர்

கூறியுள்ளார்.

மேகத்தின் கனவு வானவில் எனவும்

பூமியின் கனவு நட்சத்திரங்கள் என்றும்

சூரியனின் கனவு நிலவு எனவும் ஆணின் கனவு பெண்

என்றும் கண்ணீரின் கனவு புன்னகையாகவும்

சொற்களின் கனவு கவிதையாகவும் உண்மையின்

கனவு பொய் எனவும் கடவுளின் கனவு நாம்

அதாவது மனிதன் எனவும் கூறியுள்ளார்.

எனவே நமது கனவு கனவின் கனவாக கவிஞர்

கூறியுள்ளார்.

பூமியின் கனவு எது?

பூக்கள் அழகும்.

மேகத்தின் கனவு எது?

வானவில்.

கண்ணீரின் கனவாக ஆசிரியர் எ

[illegible].

<u>புன்னகை</u>

சொற்களின் கனவு எது?

கவிதை

கனவின் கனவாக கவிஞர் எழுதுவது எதனை?

மனிதனின் கனவு.

**வைரமுத்து**

- வடுகப்பட்டியைச் சேர்ந்தவர்
- ஆட்சிமொழி ஆணைய மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தவர்
- முதல் கவிதை 'இளநெஞ்சின் ஏக்கம்'
- வானொலியில் முதன்முதலாகப் புதுக்கவிதை பாடியவர்
  கவிதைத் தலைப்பு 'கண்ணீரைச் சிரிக்க விடுவோம்'
- முதல் கவிதைத் தொகுப்பு வைகறை மேகங்கள் என்ற மரபுக் கவிதை நூல்
- கவியரசு, கவிப் பேரரசு பட்டம் பெற்றவர்.

**நூல்கள்**

- வைகறை மேகங்கள் – மரபுக் கவிதை
  கவிராஜன் கதை – புதுக்கவிதையில் பாரதி வரலாறு
  தண்ணீர் தேசம் – புதுக்கவிதை நாவல்
  திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், கொ மரத்தின் வேர்கள், என் மௌனத்தின் சப்தங்கள்
- இதுவரை நான் – கவிதையில் தன் வரலாறு
- 28 வயதில் தன் வரலாறு எழுதியவர்

வானொலியில் முதன் முதலில் கவிதைபாடிய பெருமைக்குரியவர். நாடறிந்த கவிஞர். திரைப்படப்பாடலாசிரியர். சிகரங்களை நோக்கி, ரத்ததானம், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், கவிராஜன் கதை, கொடிமரத்தின் வேர்கள், என் மௌனத்தின் சப்தங்கள் உள்ளிட்ட புதுக்கவிதைத் தொகுதிகளைப் படைத்தளித்துள்ளார்.

## 1. எப்போது உருப்படும் இந்தத் தேசம்?

“கிராமங்கள்.......
எந்த அந்நிய அம்பும்
துளைக்க முடியாத
பஞ்சுக் கவசங்கள்!”
“நம் பண்பாட்டுச் சில்லறைகளைப்
பாதுகாக்கும் உண்டியல்கள்”

“நமது
கலாசார ஆய்வுக்குத்
தரையில் கிடைத்த
தடயங்கள்!”

என்றெல்லாம்
மாத்திரை வார்த்தைகளால்
மயக்கினார்களே!
இன்று.....
தனது
கலாசார ஆடையைக்
கழற்றிவிட்டு
சினிமா சுவரொட்டிகளைத்
தரிக்கத் துடிக்கும் ஒரு தரித்திரம் தான்-அதன்
இன்றைய நிமிஷங்கள்!

விஞ்ஞான நாகரிகம்
வீசிய வலைகளில்
தாவணிப் பறவைகள்
தடுமாறின.
பவுடர் டின்களின்
கிராமப் பிரவேசம்
மஞ்சள் உரசும்
ஆற்றங்கரைப் பாறைகளை -
கோயில் சிலைகளைப் போல்
கறுக்கடித்து விட்டது.

சிங்க இளைஞர்களின்
சிலம்பக் கழிகள்
இன்று
ஊன்று கோல்களாய்
உருமாற்றம் அடைந்தன.

கிராமத்துப் பொதுமரத்தில்
அதன் இலைகளைவிட
அதில் பறக்கும்
கட்சிக் கொடிகளின்
எண்ணிக்கையே அதிகம் இப்போது.

ராஜாக்கள்
வெண் கொற்றக் குடையின் கீழ்
வாழ வைத்தார்களாம்
இன்று வறுமைக் கோட்டின் கீழ்
வாழ வைக்கிறார்கள்!

★★★

ராமராச்சிய மனுக்களுக்கு
அனுமன்களே தீ வைத்துவிட்டார்கள்!